மக்கள் குரல் 21-9-2021 7

## நிறுவனர் என்.பி.வி. ராமசாமி உடையார் 86–வது பிறந்த நாள்

# ராமச்சந்திரா பல்கலைக்கழக விழாவில் சாதனை மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்கள்

## வேந்தர் வி.ஆர்.வெங்கடாசலம், இணைவேந்தர் ஆர்.வி.செங்குட்டுவன் வழங்கினர்

சென்னை, செப். 21–

ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நிறுவனர் என்.பி.வி. ராமசாமி உடையார் 86–வது பிறந்த நாள் மற்றும் பல்கலைக்கழக தின விழாவில் சிறந்த மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், நெடுநாள் பணியாற்றிய பணியாளர்களுக்கும் தங்க பதக்கங்கள், விருதுகளை வேந்தர் வி.ஆர்.வெங்கடாசலம் வழங்கினார்.

எம்.பி.பி.எஸ் படிப்பில் சிறப்பாக தேறியவர்களில் டாக்டர் அரவிந்த் ராதாகிருஷ்ணன், எஸ். என். பாலலட்சுமி மற்றும் ஆர். ராம்பிரசாத் ஆகியோர் தலா மூன்று தங்கப்பதக்கங்களையும், ஸ்ரீவித்யா ரவிசங்கர் மற்றும் டாக்டர் பி. ஆதித்யா தலா இரண்டு தங்கப்பதக்கங்களையும் பெற்றனர். மொத்தம் 50 தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

பேராசிரியர் மற்றும் இயக்குனர் பன்னாட்டு உறவு டாக்டர் டி.கே. பார்த்தசாரதி, இதயநலத்துறை பேராசிரியர் ஜெ.எஸ்.என். மூர்த்தி மற்றும் மருத்துவ கண்காணிப்பாளர் எஸ். மல்லிகேசன் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனை விருது வழங்கப்பட்டது.

பேராசிரியர் மற்றும் கல்வித்துறை ஆலோசகர் டாக்டர் கே.வி. சோமசுந்தரத்திற்கு சிறந்த வழிகாட்டி விருதும் மருத்துவக் கல்லூரி முதல்வர் எஸ். அனந்தன் மற்றும் பதிவாளர் வி. சுவாமிநாதன் ஆகியோருக்கு சிறப்பான சேவைக்கும் மற்றும் இதயநலத்துறை தலைவரும் பேராசிரியருமான டி.ஆர். முரளிதரனுக்கு கவிஞர் விருதும் வழங்கப்பட்டன.

வேந்தர் வி.ஆர். வெங்கடாசலம் மற்றும் இணைவேந்தர் ஆர்.வி. செங்குட்டுவன் சிறந்த மாணவர்கள், ஆசிரியர்கள், செவிலியர்கள், ஆய்வாளர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களுக்கு தங்க பதக்கங்களையும் விருதுகளையும் வழங்கினர்.

நீண்ட காலம் பணியாற்றியவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. அப்போது பேசிய வேந்தர் வி.ஆர். வெங்கடாசலம், கோவிட் பெருந்தொற்று காலத்தில் அந்நோயாளிகளுக்கு அயராது பணியாற்றிய மருத்துவர்கள், செவிலியர்கள், துணை மருத்துவர்கள் மற்றும் பிற பணியாளர்களின் அரிய சேவைகளை பாராட்டினார்.

நிகழ்ச்சியில் பேசிய துணை வேந்தர் பி.வி. விஜயராகவன், தற்போது பல்கலைக்கழகம் சிறந்த உலகத்தரம் வாய்ந்த வணிகக் கல்லூரியை உருவாக்கவும் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப துறையை உலகளவில் நவீன மயமாக்கவும் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது என்றும் மூன்றாவது சுழற்சியில் தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சில் ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மொத்தம் நான்கு புள்ளிகளில் 3.53 இலக்கில் ஏ++ அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று கூறினார்.

நிறுவன வேந்தர் மறைந்த ராமசாமி உடையாரின் பங்களிப்பை போற்றி டாக்டர் மல்லிகேசன் நினைவஞ்சலி செலுத்தினார்.



பதிவாளர் வி.சுநாமிநாதனுக்கு சிறப்பு சேவை சாதனையாளர் விருதை வேந்தர் வி.ஆர். வெங்கடாசலம் வழங்கினார். இணைவேந்தர் ஆர்.வி. செங்குட்டுவன் உடன் உள்ளார்.